LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES
ஐசர்விஸ்
iService®
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494

GST ROAD NEWS
TAMBARAM
Weekly News Paper
Email:gstroadnews@gmail.com
www.gstroadnews.com
Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar
Vol:13 Issue -19 17 Aug 2025 - 23 Aug 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902

LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES
ஐசர்விஸ்
iService®
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494

FLATS FOR SALE
@ CHROMPET THIRUMALAI NAGAR

NISHAN APARTMENT
5th STREET NR. ZION SCHOOL
2 BHK-960 Sqft
3 BHK-1200 Sqft
Lift/CCP/CCTV/ VIDEO DOOR PHONE
AS PER VASTHU / 24 HRS WATER
IND.VILLA FOR SALE
@ AGARAM THEN

Nr. AGARAM BUS STAND & HP PETROL BUNK
3&4 BHK-VILLA
LAND AREA 1000,1250,1400 Sqft
NISHAN CONSTRUCTION 98409 84126

Kts EVENTS

PHOTOGRAPHY
VIDEOGRAPHY
WEDDING
BIRTHDAY
DECORATION
DJ & AUDIO
STAGE SETUP
BALLOON ARCH
360 SELIFIE BOOTH
WELCOME GIRLS
MAKEUP
CATERING
BOUNCERS
VJ & MIMICRY
BOOKING NOW
ktsevents2021@gmail.com kts.events
9840727565
7338810565
11/5, Thirupur Kumaran Street, Radha Nagar, CHROMEPET Chennai - 600 044

PREMIUM FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr. Zion School
Natarajan Apartment
LINITH CASITA

2 BHK
980 Sqft
3 BHK
1240 Sqft
Rs.72L
ALL INCLUSIVE
☑ Lift ☑ CCP ☑ CCTV
☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585

## ரஷ்யா உக்ரைன் போர் நிறுத்தம்

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம், ஆங்கரேஜ் நகரில் உள்ள ராணுவ தளத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அதிபர் புதின் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. ரஷ்ய தரப்பில் அதிபர் புதின் உடன் வெளியுறவு அமைச்சர் செர்கே லாரவ், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆண்ட்ரே பெலோசோவ், நிதியமைச்சர் அண்டன் சிலுன்னோவ் மற்றும் 2 மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துள்ளனர் இந்த சந்திப்பின் போது ரஷ்யா உக்ரைன் இடையே நடந்து வரும் போரை 30 நாட்கள் நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது இதற்காக புதன் பல்வேறு நாட்டு தலைவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்

PAAVAYEE BUILDERS
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
PREMIUM FLATS FOR SALE
@ HASTHINAPURAM
3 BHK
ONLY ONE UNIT AVAILABLE
✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Metro Water ✓ Video Door
No Water Logging
SITE ADDRESS : MC NAGAR 1st MAIN ROAD, (OPP. TO SAI BABA TEMPLE), HASTHINAPURAM, CHITLAPAKKAM.
READY TO OCCUPY

Stilt + 3 Floors
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School

3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged
MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004


ONLY 2 FLATS AVAILABLE
FLATS FOR SALE
CHROMEPET
HASTHINAPURAM
RAMBAKSHI NAGAR, AGS COLONY
Near. Hasthinapuram Bus Stand & 1.3km From 200 Feet Road
2 BHK-780 Sqft (Each Floors)
AMENITIES
✓ 100% Vasthu ✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Loan Arranged ✓ No Water Logging
✓ UPVC Windows ✓ Modular Kitchen
✓ Hall False Ceiling ✓ M-D North Facing
NANDHA FOUNDATIONS PVT LTD
98401 07534 / 98412 17499

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*

4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

KRISHNA NAGAR
Nr. HASTHINAPURAM BUS STAND

24 HRS POWER BACKUP*
3 BHK - 1287 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*

3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD HDFC BANK SBI

# ஆவணி மாதச் சிறப்புகள்

இருபத்தி ஏழு நட்சத்திரங்களில் இரண்டே இரண்டு நட்சத்திரங்கள்தான் திரு என்ற அடைமொழியுடன் உள்ளன. முதலாவது திருவாதிரை. அது சிவனுக்குரியது. அடுத்தது திருவோணம். அது பெருமாளுக்குரியது.

திருமாலின் நட்சத்திர மாக திருவோணம் அமைந் துள்ளது.

சிம்ம ராசிக்குரியவர் சூரியனாதலால் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவணியை சிங்க மாதம் என்று கூறுகிறார்கள். அம் மாதத்தையே அவர்கள் ஆண்டின் முதல் மாத மாகவும் கருதுகின்றனர்.

ஈரடியால் மண்ணும், விண்ணும் அளந்த திருமால், மூன்றாவது அடியால் மகாபலியைப் பாதாள உலகத்திற்கு அழுத்தி பேரருள் புரிந்தவர் என்று விஷ்ணுபுராணம் கூறுகிறது. மகாபலி, பெருமானுக்குத் தானம் கொடுத்தது இந்த ஆவணி மாத சிரவண துவாதசி நாளில்தான். சிரவணம் துவாதசி திதியில் வந்தால் அது மிகவும் உயர் வானது என்று சொல்லப் படுகிறது. இந்த நாளை ஒட்டிதான் மேஷ விஷு என்று கேரள மாநிலத்தில் விசேஷமாக பத்து நாட்கள் கொண்டாடுகிறார்கள். வீடுகளை அலங்கரித்து திருவிளக்கேற்றி வழிபடுவார்கள். கும்மியடித்துக் கோலாகலம் காண்பார்கள். எல்லா ஆலயங்களிலும் விசேஷ வழிபாடுகள் நடை பெறும். கேரள மாநிலத்தவர் எங்கிருந்தாலும் கொண்டாடி மகிழும் பண்டிகைகளில் ஒன்று திருவோண நாளாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திருவோண நாளை விரத நாளாக அனுசரிக்கின்றனர். முதல்நாள் இரவு உபவாசம். திருவோண நட்சத்திர நாளில் மகாவிஷ்ணுவைத் துதிப்பது, விஷ்ணு புராணத்தை பாராயணம் செய்வது, நிவே தனம் செய்த பொருட்களை ஒரு பொழுது மட்டும் உண்பது என விரதம் இருக்க வேண்டிய நாள் இது. விரதம் இருக்க இயலாதவர்கள் அருகாமையில் உள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்று வழிபடலாம். சிரவண நட்சத்திரம் கூடிய நாளில் மாலைப் பொழுதில் மகாவிஷ்ணுவிற்கு கோயிலி லும் வீட்டிலும் நெய் விளக் கேற்றி வழிபட்டால் சிறந்த பலன்களைப் பெறலாம். இதை சிரவண தீபம் என்பர்.

ஆவணி மூலம் திருநாள், அசுர சக்திகளை வென்று ஒழிப்பதற்குத் துணை செய்யும் என்று கருதுபவர்கள் உண்டு. மூல நட்சத்திரத்தின் அதிதேவதை நிருருதி என்ற அசுரன். தேவசக்தி, அசுரசக்தி என்ற இருவகை சக்திகள் உலகம் நன்மை பெறுவதற்குக் காரணம் என்றும் தெய்வ சக்திகள் ஆத்மாக்களின் பரிணாமத்திற்கு அனுகூலமானவை என்றும் அசுர சக்திகள் ஆன்ம முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவை என்றும் சொல்லப்படுகிறது. இந்த தேவ–அசுரப் போராட் டத்தில் நாம் இயன்றவரை தெய்வ சக்திகளுக்குத் துணை புரிய வேண்டுமென்றும் ஞான நூல்கள் கூறுகின்றன.

நிருருதி என்ற அசுரத் தலைவனின் செல்வாக்கு மூல நட்சத்திரத்தை ஆட்கொள்வதால் ஆவணி மூல விழாக் கொண்டாட்டத் தால் ஏற்படும் பக்தி உணர்ச்சியைக் கொண்டு அந்த செல்வாக்கை ஒழிக்க முயல வேண்டும் என்பர்.

நாடெங்கிலும் ஆவணி மூலத் திருவிழா கொண்டாடப்பட்டாலும் மதுரை பிட்டுத் திருவிழா குறிப்பிடத் தக்க ஒன்று. ஏழைக் கிழவி யான வந்தி என்பவளுக்காக ஈசன் மனிதர்களோடு மனிதராய்க் கலந்து பிட்டுக் காக மண் சுமந்து, கூலி வாங்கி, பிரம்படியும் பெற்றுக் கொண்ட பெருநாள், ஆவணி மூல நாள்.

மாணிக்கவாசகப் பெருமானுக்குத் திருப்பெருந்துறையில் உபதேசம் செய்த குருமூர்த்தி, 'நீ போய் பாண்டியனைப் பார்த்து ஆவணி மூல நாளில் குதிரைகள் வந்து சேரும் என்று கூறுவாய்' என்று கூறினாராம்.

ஆவணி மாதம் பௌர்ணமி நாளில் ஆண்களுக்காகக் கொண்டாடப்படும் பண்டிகைதான் ஆவணி அவிட்டம். யஜுர் வேதத் தைப் பின்பற்றுகிறவர்கள் இந்தச் சடங்கைக் கொண் டாட இயலாதபடி ஏதாவது குறைபாடு இருந்தால் புரட்டாசி மாத பௌர்ணமியில் அதை மேற்கொள்வது வழக்கம். ரிக் வேதிகள் சிரவண நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது இதனை அனுசரிக்கிறார்கள். சாமவேதிகள் ஹஸ்த நட்சத்திரமும் பஞ்சமி திதியும் கூடிய நாளில் உபாகர்மம் நடத்துகின்றனர். வேறு விதமாக உபாகர்மம் கொண்டாடும் சாமவேதி களும் உண்டு புதுப் பூணூல் அணிந்து கொள்வதால் இப்பிறவியிலேயே மற்றொரு பிறவி எடுத்ததாக பொருள். அதனால்தான் பூணூல் அணிபவர்களை துவிஜர்( இரு பிறப்பாளர் ) என்று குறிப்பிடுவார்கள்.

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காக ஏற்பட்ட கிருஷ்ணாவதாரம் எனும் பூர்ணாவதாரம் நிகழ்ந்தது, ஆவணி மாத தேய்பிறையின் எட்டாம் நாள். ரோகிணி நட்சத்திரத் துடன் கூடிய அந்த நாளின் நடுநிசியே கிருஷ்ணன் அவதாரம் செய்த நாள். அந்நாளையே ஸ்ரீஜெயந்தி என்றும், கோகுலாஷ்டமி என்றும் கொண்டாடுகிறோம்.

# ஸ்ரீ சுதர்சனர் வழிபாடு பற்றிய அரிய 10 விஷயங்கள்!

ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை தரிசித்தால், சகல தோஷங்களும் விலகும். அவரின் பரிபூரண அருள் கிடைக்கப்பெற்று நிம்மதியும், சந்தோஷமும் பொங்க வாழலாம் என்பது ஐதீகம்.



1. ஸ்ரீ சுதர்சனரை வழிபட சித்திரை நட்சத்திர தினங்கள் சிறப்பானவை. சித்திரை அவருக்குரிய நட்சத்திரம்.

2. சுவாமி தேசிகனின் சுதர்சனாஷ்டகமும், ஷோடசாயுத ஸ்தோத்திரமும் சொல்லி வந்தால் எளிதில் ஸ்ரீ சுதர்சனரின் அருளைப் பெறலாம்.

3. சக்கரத்தானை, 'திருவாழியாழ்வான்' என்று போற்றுகின்றனர் ஆழ்வார்கள்.

4. சுவாமி தேசிகன் இவரை 'சக்ர ரூபஸ்ய சக்ரிண' என்று போற்றுகிறார். அதாவது, திருமாலுக்கு இணையானவர் என்று இதற்குப் பொருள்.

5. கும்பகோணம் சக்ர படித்துறையில் உள்ள சக்கர தீர்த்தத்தில்தான் பிரம்மா அவப்ருத நீராடல் செய்து யாகம் செய்தார். உடனே பாதாளத்திலிருந்து சக்கரம் வெளிக்கிளம்பி மேலே வந்தது. அந்த சக்கரத்தின் நடுவில் பிரம்மனுக்கு அன்று காட்சி தந்த ஸ்ரீமந் நாராயணன்தான் இன்று நமக்கு ஸ்ரீ சக்ரபாணியாகக் காட்சி தருகிறார்.

6. சாளக்ராமங்களில் சுதர்சன சாளக்ராமம் மிகச் சிறந்தது. ஒரு சக்கரம் மட்டுமே உள்ள மிகப் பெரிய சாளக்ராமம் சுதர்சனமாகும். திருமாலின் சக்ராயுதத்தின் பூர்ண சக்தி இதற்கு உண்டு.

7. ஸ்ரீ சக்கரத்தாழ்வாரையும், அவர் பின்புறமுள்ள ஸ்ரீ நரசிம்மரையும் வணங்கி சுற்றி பிரதட்சணம் செய்தால், நான்கு வேதங்களையும், பஞ்ச பூதங்களையும் அஷ்ட லட்சுமிகளையும், எட்டு திசைகளையும் வணங்கிய பலன் கிடைக்கும். 16 வகையான பேரருளும் கிடைக்கும் என்பது முன்னோர்களின் வாக்கு!8. நரசிம்ம அவதாரத்தில் அரக்கனின் வரத்தையொட்டி எந்த ஆயுதமும் இல்லாமல் ஹிரண்யகசிபுவை நரசிம்மர் அழித்தபோது, அவரது நகங்களாக விளங்கியவர் சுதர்சனரே.

9. வாமன அவதாரத்தில், சுக்ராச்சாரியாரின் கட்டளையை மீறி மகாபலி மன்னன் வாமனனுக்கு தானம் கொடுக்க தாரை வார்த்தபோது, சுக்ராச்சாரியார் வண்டாக வந்து கமண்டல நீர்ப் பாதையை அடைத்தார். அப்போது திருமால் பவித்திரத்தால் கிளற, சுக்ராச்சாரி யார் தனது கண்ணை இழந்தார். அங்கு பவித்திரமாக வந்தவர் சுதர்சனரே.

10. சக்கரத்தாழ்வார் பல பழைமையான திருக்கோயில்களில் தனிச்சன்னிதி கொண்டு காட்சியளிப்பதைக் காணலாம். (குறிப்பாக ஸ்ரீரங்கம், காஞ்சி வரதர் கோயில், திருமாலிருஞ்சோலை (கள்ளழகர்) கோயில், திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர்.) தற்போது ஸ்ரீ சுதர்சனரின் மகிமையைப் புரிந்துகொண்டு பல திருத்தலங்களில் இவருக்குத் தனிச்சன்னிதி அமைக்கப் பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.


# கோவில் நிலைவாசல்படியை தாண்டலாமா கூடாதா?

நம் அனைவருக்குமே கோவிலுக்கு செல்லும் பழக்கம் இருக்கும். அவ்வாறு கோவிலுக்கு செல்லும் போது சிலர் கோவிலின் நிலைவாசல்படியைத் தாண்டியும், மிதித்தும் செல்வதையும் கவனித்திருப்போம். இன்னும் சிலர் நிலைவாசல்படியை தொட்டு வணங்குவார்கள். இதில் எதை செய்வது சரியானது. அதைப் பற்றி விரிவாக இந்தப் பதிவில் காண்போம்.

நாம் வீடு கட்டும் போது நம்முடைய வீட்டின் நிலைவாசலில் பஞ்ச உலோகங்களை வைத்து குலதெய்வத்தை வைத்து நிலைவாசலை அமைப்போம். அத்தகைய வீட்டின் நிலைவாசலை குலதெய்வமாகவும், மகாலக்ஷ்மியாகவும் கருதுவோம். அத்தகைய நிலைவாசலில் உட்கார்ந்தாலே தவறு என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

அப்படியிருக்கையில் கோவிலின் நிலைவாசல் எத்தகைய சக்தி பெற்றதாக இருக்கும். கோவிலுக்கு செல்வதற்கு முன்பு அகம், புறம் இரண்டையும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும். கோவிலில் அமைந்திருக்கும் குளம் போன்ற புனித நீர்நிலையில் சென்று கால்களை தூய்மையாக கழுவிய பிறகு கோவிலுக்குள் செல்ல வேண்டும்.

கோவிலுக்கு சென்று இறைவழிப்பாடு செய்வதற்கு முன்பு கோபுரத்தில் இருக்கும் கலசத்தை வழிப்பட வேண்டும். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று சொல்வார்கள். இதற்கு பிறகே கோவிலின் நிலைவாசல் வழியாக உள்ளே செல்ல வேண்டும்.



நம் மனதில் எண்ணற்ற கவலை, துயரம், தீய எண்ணங்கள் இருக்கும். அத்தகைய மனநிலையுடன் நாம் கோவிலுக்கு செல்லும் போது நம்மில் இருக்கும் பல்வேறு விதமான கெட்ட எண்ணங்களை தடுக்கக் கூடிய ஆற்றல் இந்த கோவில் நிலைவாசல்படிக்கு உண்டு.

இந்த கோவில் நிலைவாசல்படியை மிதித்துவிட்டு உள்ளே செல்லும் போது நம்முள் இருக்கும் துயரம், கவலை, தீய எண்ணங்கள் அப்படியே இருக்கும் என்று சொல்லப்படுகிறது.இதுவே கோவிலில் உள்ள நிலைவாசல்படியை தாண்டி செல்லும் போது நம்முள் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள், கெட்ட விஷயங்கள் நீங்கி மனம் தூய்மைப்பெறும் என்று சொல்லப்படுகிறது. பிறகு கருவறைக்கு சென்று இறை வழிப்பாடு செய்யும் போது அங்கிருக்கும் நேர் மறை ஆற்றல் நமக்குள் முழுமையாக கிடைக்கும். இன்னும் சிலர் நிலைவாசல்படியை தொட்டு வணங்கிவிட்டு கோவிலுக்குள் செல் லும் பழக்கத்தைக் கொண்டிருப்பார்கள். அவ்வாறு செய்யும் போது அது இன்னும் சிறப்பாகவும், அதிர்ஷ் டமாகவும் கருதப்படுகிறது.

எனவே, கோவிலுக்கு இனி செல்லும் போது நிலைவாசல்படியை மிதிக்காமல் தாண்டி செல்வதை வழக்கமாக வைத்துக் கொள்ளுங்கள்.


# CLASSIFIEDS

## RENTAL

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2BHK
PURE VEG
8072230451

COMMERCIAL SPACE FOR RENT
(INDEPENDENT HOUSE)
NAGAPPA NAGAR, CHROMPET
IDEAL FOR OFFICE / CLINIC / TUITION CENTER)
(NEAR RELA HOSPITAL / OPP. SUNSHINE SCHOOL)
2,600 Sqft (GROUND & FIRST FLOOR
5 BEDROOMS | 6 REST ROOMS | 3 HALLS |
2 KITCHEN AMPLE PARKING | SEPARATE EB CONNECTIONS
QUALITY METRO / BORE WATER RECENTLY RENOVATED
81223 26609

## LEASE

HOUSE FOR LEASE
@ PAMMAL
T.R.MANI STREET,Nr.MARKET
2BHK SEMI IND,HOUSE (GROUND FLOOR)
GOOD WATER FACILITY (CORP WATER)
98844 87188

## FLAT RESALE

FLAT FOR RESALE
@PORUR
2&3 BHK
FLATS AVAILABLE
WITH CCP
80722 30451

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS-412 Sqft 1ST FLOOR
@KRISHNA NAGAR
1182 Sqft 484 Sqft 1ST FLOOR
80722 30451

## INDEPENDENT HOUSE

IND. HOUSE FOR SALE
@ PERUNGALATHUR
LAND AREA - 1440 Sqft
BUILT UP AREA - 1290 Sqft
80722 30451

## LAND SALE

APPROVED LAND FOR SALE / JV
1KM OFF GST Nr.KILAMBAKKAM BUS TERMINUS
2057 SQFT
EAST FACING 30 FT ROAD
@GUDUVANCHERRY
NANDIVARAM MAHALAXMI NAGAR EXTENSION III
99621 66922

தாம்பரம் முடிச்சூர் அருகில்
வீட்டு மனை விற்பனைக்கு
CMDA APPROVED LAND
ON 30 FEET ROAD
63749 72665

## BUILDING CONTRACT




Building Construction
+Renovation +Interior
Including OHT & Septic Tank
✓ Architectural Design
✓ Engineer Supervision
✓ Branded Materials
80724 99969


## FLAT SALE

NEW RESIDENTIAL FLATS FOR SALE
@CHROMPET NEHRU NAGAR
NEARER TO RAILWAY STATIONS & BUS STOP
2 & 3 BHK WITH CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382


## DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.


COMMERCIAL SPACE
WITH LIFT & AMPLE PARKING FACILITIES
FOR RENT
GROUND FLOOR 1500 SQ.FT.
FIRST FLOOR 1500 SQ.FT.
SECOND FLOOR 1500 SQ.FT.
COMMERCIAL SHED



Agaram Then 31A Bus Stop
9840050741

குரோம்பேட்டை கல்சுரல் அகாடமி
17.08.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி
காமாட்சி கம்யூனிடி ஹால், ராதா நகர், குரோம்பேட்டை
குரோம்பேட்டை கல்சுரல் அகடமி ஆதரவில்,
கலைமாமணி குடந்தை மாலி அவர்களின்
" Mali's Stage" வழங்கும்
"ஆத்ம விசாரணை" மேடை நாடகம்
சிறப்பு விருந்தினர்: குருஜி கோபாலவல்லி தாசர்
டிக்கெட்டுகள் அரங்கத்தில் கிடைக்கும் Cell: 9444690174
இடம்: குரோம்பேட்டை கல்சுரல் அகாடமி,காமாக்ஷி திருமண மண்டபம், ராதாநகர் மெயின் ரோடு, குரோம்பேட்டை, சென்னை 44.

GST ROAD NEWS
FOR ADVERTISMENT DETAILS CONTACT
89395 26999 / 044-22236399

GST ROAD NEWS
வெளிநாடு வாழ் தமிழர்கள் உங்கள் ஊர் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.gstroadnews.com

# Independence day celebration:



Chitlapakkam Muthulakshmi nagar welfare association members celebrated the 79th Independence day with usual gaiety. The association president L.Sundararaman presided over the function in the presence of S.Sekar vice president and K.Venkataraman auditor. D.R.Shivakumar secretary welcomed and R.M.Easwaran, treasurer hoisted the national flag and addressed. Senior citizens V.Bhupathy and S.Padmasini honoured. 43rd ward member of Tambaram corporation Sri.C.Jagan participated and addressed. S.Venkatesan proposed vote of thanksL.



தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 04, வார்டு61, குழந்தை ஏசு சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில், மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் கலந்து கொண்டு, மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு முறையாக பதிவு செய்யப்படுவதைப் பார்வையிட்டு, முகாமில் கலந்து கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், துணை மேயர்கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தாம்பரம் ரயில் நிலையத்தில் குழந்தையை விட்டுவிட்டு தப்பிய இளைஞர்

தாம்பரம் சானடோரியம் ரயில் நிலைய பிளாட்பாரத்தில், அழுது கொண்டு நின்ற மூன்று வயது ஆண் குழந்தையை, ரயில்வே பாதுகாப்பு படை மீட்டு, அரசு குழந்தைகள் காப்பகத்தில் ஒப்படைப்பு

அந்தக் குழந்தை வசதியான, குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை போல் தெரிவதால், கடத்தல் குழந்தையா? என்று சந்தேகம்.

சிசி டிவி கேமராவை ஆய்வு செய்ததில், அதிகாலை 4:30 மணிக்கு, சென்னை கடற்கரைதாம்பரம் மின்சார ரயிலில் வந்த இளைஞர் ஒருவர், குழந்தையை பிளாட்பாரத்தில் விட்டுவிட்டு, அதே மின்சார ரயிலில், இளைஞர் தாம்பரம் செல்வது தெரிய வந்தது.




## ஜிஎஸ்டியில் மாற்றம்: மோடி அறிவிப்புக்கு திருமா வரவேற்பு



பிரதமர் மோடியின் ஜி எஸ் டி வரி விதிப்பு அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: பிரதமர் சுதந்திர தின விழா உரையில், தீபாவளிப் பரிசாக ஜிஎஸ்டி வரி விதிப்பில் மாற்றம் செய்யப்படும் என்று அறிவித்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஜிஎஸ்டி வரி முறையையே கைவிட வேண்டும், பழைய முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். பிஹார் தேர்தலை மனதில் வைத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது என்றாலும்கூட, அது மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்பதால் வரவேற்கிறோம் என்றார்.

## திருச்சி ராமஜெயம் கொலை வழக்கு குற்றவாளிகள் யார்? யார்?

13 ஆண்டுகளாக திருச்சி ராமஜெயம் கொலை வழக்கு விசாரணையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அமைச்சர் கே என் நேரு இந்த ஆட்சி முடிவதற்குள் தனது சகோதரர் ராமஜெயம் கொலை வழக்கு குற்றவாளிகளை கைது செய்து யார் என முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும், குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய குடும்பத்தினர் எதிர்பார்த்த நிலையில் தற்போது கொலை வழக்கில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகளை நெருங்கி உள்ளதாகவும், அவர்கள் கைதாக உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கோவில் விழா




குரோம்பேட்டை எம் ஐ.டி அருகே அமைந்துள்ள ஹோம் பைன்டர்ஸ் குடியிருப்பு வளாகத்தின் உள்ளே அமைந்துள்ள ஸ்ரீ சர்வ மங்கள ஐஸ்வர்ய விநாயகர் ஆலயத்தின் 24 ம் வருடம் ஏக தின இலட்சார்ச்சனை வெகு விமரிசையாக நடைபெற்றது. காலை சீனிவாசன் தவில் மற்றும் மங்கல வாத்தியத்துடன் விநாயகர் தங்க கவசத்துடன் காட்சி தந்தார்.

அதற்கு பிறகு நடந்த 21 வகையான பூக்களுடன் அர்ச்சனை அலங்காரத்துடன் மகா தீபாராதனையுடன் காட்சி அளித்தார். மாலை 5 மணியளவில் சுபாஷினி மற்றும் லதா ராம் குழந்தைகளின் பாட்டு கச்சேரி நடந்தேறியது.

மாலை உற்சவ மூர்த்தி அலங்காரத்துடன் தேரில் பவனி வந்து வளாக மக்களுக்கு அருள்புரிந்தார்.

## ஆந்திராவில் பெண்களுக்கு எல்லா பஸ்களிலும் இலவசம்



ஆந்திராவில் ஸ்த்ரீ சக்தி என்ற திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் பெண்கள் ஐந்து வகையான அரசு பஸ்களில் இலவசமாகப் பயணிக்கும் திட்டம் துவக்கி வைக்கப் பட்டது.

முதல்வர் சந்திரபாபு மற்றும் துணை முதல்வர் பவன் கல்யாண் இருவரும் பஸ்ஸில் பயணம் செய்து இத் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

## தமிழகத்தில் 12 கோவில்களில் பிளாஸ்டிக் தடை



திருச்செந்தூர் முருகன் கோயில் உள்பட தமிழகத்தில் முக்கியமான 12 கோயில்களில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த தடை விதித்து இந்து சமய அறநிலையத் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிளாஸ்டிக் பொருட்களால் சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்கள் மற்றும் பிராணிகள் சந்தித்து வரும் ஆபத்துகளை தவிர்க்கும் வகையில் தமிழக அரசு பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கவும், விற்பனை செய்யவும், பயன்படுத்தவும் தடை விதித்து 2018ல் அரசாணை பிறப்பித்தது. அந்த அரசாணையில் பிளாஸ்டிக் ஷீட், பிளாஸ்டிக் பேப்பர் கப், பிளாஸ்டிக் டீ கப், பிளாஸ்டிக் டம்ளர், தெர்மாகோல் கப், அனைத்து அளவு மற்றும் தடிமனான பிளாஸ்டிக் கேரி பேக் உட்பட 9 பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

## தொடர் விடுமுறை: 6 லட்சம் பேர் சொந்த ஊர் பயணம்


சுதந்திர தினம், கிருஷ்ண ஜெயந்தி, ஞாயிறு விடுமுறை என தொடர்ந்து விடுமுறை வந்ததால் சென்னையிலிருந்து அரசுப் பேருந்துகளில் சுமார் 6 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு பயணமாகினர்

## வரும் 21ஆம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

தமிழகத்தில் வரும் 21ஆம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்.

ஆகஸ்ட் 19ஆம் தேதி வரை தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை.

## கூந்தல் ஆரோக்கியத்திற்கு சில டிப்ஸ்



காலை ஒரு முறை இரவு தூங்குவதற்கு முன்பும் ஒரு முறை என தினமும் இரண்டு முறை தலை முடியை சீவினால் தலைமுடி பாதுகாப்பாக இருக்கும் என நிபுணர்கள் பரிந்துரை செய்துள்ளனர். தினமும் இரண்டு முறை தலை சீவினால் இறந்த சரும செல்கள், ஹேர் ப்ராடக்டின் மிச்சங்கள், அழுக்கு, முடி மற்றும் உச்சந்தலையில் படிந்துள்ள அழுக்கு ஆகியவை சுத்தமாகும்.

மேலும் தலைமுடியை சீவினால் அது கூந்தலின் அளவை அதிகரிக்கப்பதோடு, தலைமுடி ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியாகவும் இருக்கும்.

என்னதான் அவசரமாக இருந்தாலும் ஈரத்துடன் தலையை வாரக்கூடாது. டவலால் நன்கு துடைத்து ஈரம் போய் தலைமுடி காய்ந்த பின்பு நல்ல தரமான சீப்புகளால் தலைசீவ வேண்டும் மாதம் ஒரு முறை கூந்தலின் அடிப்பகுதியை ட்ரிம் செய்து கொண்டால் வெடிப்பு விழாமல் தடுக்கலாம்.

இரவு படுக்கும்முன் கூந்தலை மென்மையாக வாரிவிட்டு படுக்க வேண்டும். இது தலைமுடி நன்கு வளர உதவும் கூந்தலை ப்ளீச் செய்வது கலர் பண்ணுவது, சுருளாக்குவது, நீளமாக்குவது போன்றவற்றை ஏதாவது விழா, விசேஷத்துக்கென்று செய்யலாமே தவிர, அடிக்கடி செய்யக் கூடாது. ஹேர் ஸ்ப்ரே உபயோகித்திருந்தால் இரவு படுக்கும் முன் தலையை அலசுவது நல்லது. அசதியாக இருந்தால் மறுநாளாவது அலசிவிட வேண்டும்.

## பன்னீர் கிரேவி



**தேவையான பொருட்கள்:** 100 கிராம் பன்னீர், 1 வெங்காயம், 1 தக்காளி, 1 பச்சைமிளகாய், 1/4 டீஸ்பூன் இஞ்சி பூண்டு விழுது, 1/2 டீஸ்பூன் மிளகாய்தூள், 1/4 கசூரி மேத்தி, 1/4 டீஸ்பூன் கரம் மசாலா, தேவையான அளவு உப்பு, தேவையான அளவு எண்ணெய் **செய்முறை:** பன்னீரை சிறிய துண்டுகளாக நறுக்கி எண்ணெயில் பொரித்து எடுத்து கொள்ளவும். பின்னர் வாணலியில் எண்ணெய் ஊற்றி வெங்காயம் வதக்கி தக்காளி சேர்த்து மசியும் வரை வதக்கவும். பின்னர் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை நீங்கும் வரை வதக்கி சிறுதீயில் வைத்து மிளகாய் தூள் சேர்த்து வதக்கவும். பின்னர் தேவையான அளவு தண்ணீர் சேர்க்கவும். தண்ணீர் வற்றி கிரேவி கெட்டியானதும் கசூரி மேத்தி, கரம் மசாலா, வறுத்த பனீர் சேர்த்து 2 நிமிடம் வைத்திருந்து இறக்கி பரிமாறவும்.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

ஆட்கள் தேவை
அஸ்தினாபுரம் பஸ் நிலையம் அருகே உள்ள ஜெராக்ஸ் கடைக்கு அனுபவம் உள்ள பெண்கள் வேலைக்கு தேவை
93823 03420

RAAJ INSTITUTE
B.E., B.Com., M.B.A., Diploma
School Tuition for 6th to 12th
8th Pass Directly Join 10th
10th Pass Directly Join +2
STATE / NIOS / CBSE
Spoken English & Hindi
Tally, MS Office, C, C++
No.75, Station Road, Radha Nagar, Chrompet
90032 67050

மூன்று வேளையும் வீட்டு சாப்பாடு
• காலை / இரவு - டிபன்
• மதியம் - சாப்பாடு
பிராமின்ஸ் சமையல் (சைவம்)
அஜினோமோட்டோ, Food Color சேர்க்கப்படாமல் நல்ல முறையில் தயார் செய்துதரப்படும். (Door Delivery)
Sri Vinayaga Catering Services
63696 54457 / 93427 71271

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.




PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS, STAINLESS STELL, FRIDGE, OLD COMPUTER, LAPTOP, UPS, BATTERIES, MUSIC SYSTEM, WATER HEATER, GYM ITEMS, WOODEN FURNITURE, SOFA SET, COT, BEURO, DINING SET, DRESSING & OFFICE TABLE, OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979






## கருமாரியம்மன் ஆலயத்தில் இன்று கூழ்வார்த்தல் அன்னதானம்

குரோம்பேட்டை பத்மநாப நகர் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு சிறப்பு அபிஷேகம் 10 மணிக்கு சண்முகம் குழுவினரின் பக்தி பாடல்கள், 12.45 மணிக்கு மகா தீபாதாரணை, 1 மணிக்கு கூழ்வார்த்தல் மற்றும் அன்னதானம், மாலை நாலு மணிக்கு ஸ்ரீ கருமாரியம்மன் திருவீதி விழா நடைபெறும். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதி செயலாளர் ஏ.கே.கருணாகரன், மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரை வீரன் கலந்து கொள்கின்றனர். விழா ஏற்பாடுகளை கருமாரியம்மன் பக்தஜன சபா நிர்வாகிகள் வெகு சிறப்பாக செய்திருந்தனர். கடந்த பத்து நாட்கள் அம்மனின் சிறப்பு அலங்காரத்தை கருமாரியம்மன் ஆலய சிவ ஸ்ரீ B. கணேச குருக்கள் குழுவினர் வெகு சிறப்பாக செய்திருந்தனர்.



சுதந்திர திருநாள் விழா சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கத்தின் துணைத்தலைவர் ஜெயலாப்தீன் தலைமையில் நடந்தது. மாமன்ற உறுப்பினர் ஜெகன் சிட்டிபாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். குழந்தைகளின் மூலம் கொடி ஏற்றி சிறப்பித்தார். கொடிப்பாட்டு திருமதி வெங்கடலஷ்மி,திருமதி மாலினி, திருமதி துர்கா,திருமதி வசந்தா, திருமதி ஜெயந்தி,திருமதி மைதிலி அவர்களால் பாடப்பட்டது.சிறப்பு விருந்தினர் தனது சிறப்புரையில் இப் பகுதி குறிப்பாக தூய்மை பணி செயல்பாட்டிற்காக தாம்பரம் மாநகராட்சியில் சிறந்த முன்னோடி வார்டாக தேர்ந்து எடுத்துள்ளதற்கு சிட்லபாக்கம் பகுதி வாழ் குடிமக்களுக்கு நன்றியும் இதற்கு அனைவரும் தொடர்ந்து ஒத்துழைப்பு வேண்டியும் கேட்டுக்கொண்டார்.சங்க பொருளாளர் இப் பகுதி தூய்மை பணியாளரின் கண்காணிப்பாளர் தகார்மேகம் சிறப்பான முறையில் தன்னை இதில் இணைத்து பாராட்டுகளை சங்கத்தின் மூலம் தெரிவித்தார். செயலாளர். ரவி நன்றி கூறினார்

## மெட்ராஸ் அஸ்தினாபுரம் லயன்ஸ் சங்கத்தின் சார்பில் சுதந்திர தின விழா




குரோம்பேட்டை அஸ்தினாபுரம் ஆர்பி சாலையில் உள்ள சாஸ்தா மஹாலில் மெட்ராஸ் அஸ்தினாபுரம் அரிமா சங்கம் சார்பாக 79 ஆவது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் மாவட்ட இரண்டாம் நிலை துணைஆளுநர் பி. ஜெயக்கொடி, ரீஜன்ஷேர்பர்சன் இ.ராஜமாணிக்கம் தேசியக் கொடி ஏற்றினர். செயலாளர் சங்கர் கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் லயன் K.H.சங்கரநாராயணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அமைச்சர் ஐ. பெரியசாமியிடம் 9 மணி நேரத்திற்கு மேல் தொடரும் இ.டி விசாரணை

தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும், திமுக துணைப் பொதுச் செயலாளருமான ஐ. பெரியசாமிக்குத் தொடர்புடைய இடங்கள், அவரது வீடுகளில் அமலாக்கத்துறையினர் (16.08.2025) காலை முதல் அதிரடியாகச் சோதனை நடத்தி வருகின்றனர். திண்டுக்கல் மற்றும் சென்னையில் உள்ள அமைச்சர் ஐ. பெரியசாமியின் வீடுகளில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள அமைச்சர் ஐ.பெரியசாமியின் முகாம் அலுவலகமான ரோஜா இல்லத்தில் 07.30 மணி முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டம் கோவிந்தாபுரம் பகுதியில் அமைச்சர் ஐ பெரியசாமியின் இல்லம் அமைந்துள்ளது. அங்கும் துப்பாக்கி ஏந்திய ரிசர்வ் போலீசார் பாதுகாப்புடன் 15க்கும் மேற்பட்ட அமலாக்கத்துறை அதிகாரிகள் காலை 6 மணி முதல் சோதனை நடத்தி வருகின்றனர். மேலும் இந்த இல்லத்திற்கு அருகில் உள்ள ஆரம் காலனி பகுதியில் அமைந்துள்ள சிவாஜி நகர் என்ற பகுதியில் அமைச்சர் ஐ. பெரியசாமியின் மகள் இந்திரா வசித்து வருகிறார். அங்கும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்புடன் அமலாக்கத்துறையினர் 5 பேர் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அமைச்சர் ஐ.பெரியசாமியின் கார் மற்றும் அவரது மகன் ஐ.பி.செந்தில்குமார் பயன்படுத்தும் காரிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அமலாக்கத்துறையின் விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐ.பெரியசாமியின் ஆதரவாளர்கள் அவரது வீட்டின் முன் குவிந்து வருகின்றனர். இந்நிலையில் சோதனை தொடர்பான விவரங்கள் குறித்து பிரிண்ட் எடுத்து கையெழுத்து வாங்குவதற்காக ஐபெரியசாமி வீட்டிற்குள் பிரிண்டர் ஒன்று கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் என்னென்ன, அது குறித்து வீட்டில் உள்ள நபர்களிடம் அதிகாரிகள் கையெழுத்து வாங்குவதாகக் கூறப்படும் நிலையில் அதற்காக பிரிண்டர் வீட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.









ராஜ அலங்காரத்தில் ஜமீன் பல்லாவரம் ஸ்ரீ வரம் தரும் சீனிவாச பெருமாள் அருள் பாலிக்கும் காட்சி

## கிருஷ்ணா ஜெயந்தி யாருக்கு?

நாடு முழுவதும் கிருஷ்ண ஜெயந்தி பண்டிகை கொண்டாடப்பட்டது. அதே சமயம் உண்மையில் கிருஷ்ண ஜெயந்தி செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி தான் கொண்டாடப்படும் என்று ஜமீன் பல்லாவரம் ஸ்ரீ வரம் தரும் ஸ்ரீனிவாச பெருமாள் ஆலய சீனிவாச பட்டாச்சாரியார் கூறுகிறார். நேற்று நடைபெற்ற கிருஷ்ண ஜெயந்தி விழா ஆந்திரா மற்றும் வட நாட்டு பக்தர்களால் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அடுத்த மாதம் 14ஆம் தேதி தான் கிருஷ்ண ஜெயந்தி என்று அவர் தெரிவித்துள்ளார்.




Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725